பரி பவுல் ஆலயம்,குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## 48ஆம் ஆண்டு விழா

ஆண்டு விழா வாக்குத்தத்தம்


## நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்...

ஆதி 12:2

www.ahmaditamilchurch.com

# ATC FAMILY TREE

## Commitee Members



## Ministry Coordinators



# சபை ஊழியரின் அன்பு மடல்

இந்த 48–வது ஆண்டு விழா இதழின் மூலம் உங்களை சந்திப்பதில் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். உங்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் வாழ்த்துகிறேன்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கடந்த அக்டோபர் மாதம் முழு வதும் நம்மை பாதுகாத்த தேவன் வரும் நவம்பர் மாதத்திலும் நம்மை கிருபையால் வழி நடத்துவாராக. நமது சபையின் 48–வது ஆண்டு விழாவிற்கான கர்த்தர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம் "நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" ஆதி–12:2 - I Will Bless You.

இது ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் அதே வாக்குத்தத்தத்தை நம் சபைக்கும் தருகிறார். பிரியமானவர்களே ஆபிரகாமுக்கு கர்த்தர் 3 பெரிய ஆசீர்வாதங்களை கொடுத்தார்.

1. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரை பெருமைப்படுத்துவேன்.
2. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன் உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன்.
3. பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.

மேற்சொன்ன மூன்று ஆசீர்வாதங்களையும் ஆபிரகாம் வாழ்க்கையில் கர்த்தர் நிறைவேற்றினார். இதே விதமாக நம் சபையையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார். அல்லேலூயா. இனி கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள் எப்படியெல்லாம் இருக்கும் என்று கீழ் வரும் பகுதிகளில் காணலாம்.

## 1. வேதனையற்ற ஐசுவரியம்...

"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும் அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" (நீதி–10:22) ஆம், பிரியமானவர்களே கர்த்தர் தரும் ஆசீர்வாதங்களிலே வேதனை இருக்காது. தடைகள் காணப்படாது. பேதுருவை கர்த்தர் ஆசீர்வாதிக்கும்போது இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன். பாதாளத்தில் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்கு தருவேன். பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும். (மத்–16:18–25) இதுவே கர்த்தர் அருளும் ஆசீர்வாதம். நம் சபைக்கும் இந்த ஆசீர்வாதத்தை கொடுக்கிறார். பாதாளத்தின் வாசல்கள் நம் சபையை மேற்கொள்ளப்போவதில்லை. இயேசுவின் நாமத்தில் அற்புதங்கள் நடக்கும் இந்த சபைக்குள் வந்து ஜெபிக்கிறவர்கள் கட்டுகள் யாவும் அவிழ்க்கப்படும். பரலோகத்தின் சித்தம் நம் சபையில் வெளிப்படும். மகிமையான சபையாய் நம் சபையை ஆண்டவர் வழிநடத்துவார். காரணம் இயேசு என்ற கன்மலையில் மேல் அஸ்திபாரம் போடப்பட்டு அஹமதி தமிழ் சபை நிற்கிறது.

## 2. பரலோக ஆசீர்வாதம்...

நாம் நம் சபையின் மூலமாக 30 அநாதைக்குழந்தைகள் தாங்கப்படுகிறார்கள். 20 மிஷனெரிகளை நாம் தாங்குகிறோம். வருடத்திற்கு ஒரு முறை ஏறக்குறைய 140 ஏழை ஊழியர்களுக்கு பங்குகளை பிரித்து அனுப்புகிறோம். வட இந்தியப் பகுதிகளிலே ஆலயங்களை கட்டுகிறோம். இவைகளே தேவையான ஒன்று. மேலும் நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கு. இப்படிப்பட்ட தான தர்மங்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். இவைகளெல்லாம் நம் சபை செய்வதினாலே பரலோகத்திலே நமக்கு பெரிய பொக்கிஷம் சேர்த்து வைக்கப்படுகிறது. இதுதான் உண்மையான ஆசீர்வாதம். "பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளை கெடுக்கும். இங்கு திருடரும் கன்னமிட்டு திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமுமில்லை அங்கே திருடர் கன்னமிட்டு திருடுகிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ? அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்–6:19–21).

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார் இந்த உலகத்தில் நாம் செய்கிற நற்செயல்கள் பொன்னாக வெள்ளியாக மற்றும் விலையேறப்பெற்ற கல்லாக இருக்கவேண்டும (Diamond) அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும் நாளில் அது அக்கினியாலே பரிசோதித்து வெளிப்படுத்தப்படும். இந்த திடமான பொருட்கள் அக்கினியில் சேதமாகாது. அதே சமயம் இந்த உலகத்தில் நாம் செய்கிற செயல்கள் மரமாக புல்லாக மற்றும் வைக்கோலாக இருக்கும் என்றால் அந்த அக்கினி பட்சித்துப்போடும். ஆகவே போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுவின் மேல் கட்டப்பட்ட சபை இந்த உலகத்தில் நற்காரியங்களை செய்து பரலோகத்திலும் போற்றப்படும். (1-கொரி-3:11-15) இந்தக்கிருபையை நம் சபைக்கு கர்த்தர் கொடுத்திருக்கிறார். இதுவே உண்மையான பரலோக ஆசீர்வாதம்.

## 3. கொடுக்கிறதிலே ஆசீர்வாதம்...

நம் சபையின் மூலம் கேம்ப் ஊழியங்கள் நடைபெறுகிறது. ஒவ்வொரு வாரமும் குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூடுகை நடைபெறுகிறது. ஒவ்வொரு வாரமும் சகோதரிகளின் ஜெபம் நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதமும் வாலிபர் கூடுகையும் சகோதரிகள் ஐக்கிய கூடுகையும், இரவு ஜெபக்கூடுகையும் நடைபெறுகிறது. இந்த எல்லா கூடுகைகளிலும் ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகின்றது. இந்த எல்லா ஜெபங்களின் அநேகர் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசிக்கப்படுகிறது. (ஏசாயா-61:1-11) வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளை சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள். பிசாசுகளை துரத்துங்கள். இலவசமாய் பெற்றீர்கள் இலவசமாய் கொடுங்கள். உங்கள் கச்சைகளில் பொன்னையாவது, வெள்ளியையாவது. செம்பையாவது, வழிக்காக பையையாவது, இரண்டு அங்கியையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது தேடி வைக்க வேண்டாம். வேலையாள் தன் ஆகாரத்திற்கு பாத்திரனாயிருக்கிறான். (மத்-10:8-12).

நம் அருள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மேற்சொன்ன கட்டளையை ஏற்று அனைத்து ஊழியங்களும் நம் சபையில் செய்யப்படுவதால் குறைவில்லாத ஆசீர்வாதங்களை நம் சபைக்கு செய்து வருகிறார். கிருபையாய் நம்மை இந்த தேசத்திற்கு அழைத்து வந்து எதையெல்லாம் கர்த்தர் நமக்கு கொடுக்கிறாரோ அதையெல்லாம் ஆண்டவருக்காகவே நாம் கொடுக்கிறோம்.

பிரியமானவர்களே, மேற்சொன்ன ஆசீர்வாதங்களை நமக்கும் நம் சபைக்கும் நம் குடும்பங்களுக்கும் கர்த்தர் கொடுத்திருக்கிறதாலே இந்த 48-வது ஆண்டு விழாவை நன்றியோடு நினைவு கூறுவோம். கண்ணீரோடு கர்த்தரை துதிப்போம். மேலும் மேலும் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொண்டு தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு ஆத்துமாக்களைசேர்ப்போம். கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
S.ஸ்டாலின்





## சபையின் செயலாளர்

### முழு மதியாய்...

அஹமதி தமிழ் திருச்சபையே நீர் என்
அகத்தின் முழுமதியாய்...
48-வது ஆண்டின் நிறைவை காணும்
என் நிறைமதியாய்...
அநேக ஊழியங்களை செய்து வரும்
எங்கள் ஊக்கமதியாய்...
பல ஊழியர்களை போஷித்த பாசமதியாய்...
இன்னும் பல ஆண்டுகளை காணப்போகும்
எங்களின் ஒப்பற்றதும் சிறப்புமுமாய்
பெருமையுடன் வாழ்ந்து
வாழ்ந்து கொண்டிருக்கும்
திருச்சபையே நீர் என்றென்றும்
வாழ வேண்டும்,

என்று விரும்பும் உமதடிமை நான்.

இப்படிக்கு,
S.சுகுமாரன்
மற்றும் குடும்பத்தார்

## சபையின் பொருளாளர்

48-வது ஆண்டு விழா
மற்றும்,
22 வது சிறுவர் வேதாகம பள்ளி
ஆண்டு விழாவை
கொண்டாடுகிற உங்கள் அனைவரையும்
இயேசு கிறிஸ்துவின்
இனிதான நாமத்தினால்
மனமார வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
S.சிவக்குமார்
மற்றும் குடும்பத்தார்



## சபை வாலிபர்கள் குழு பொறுப்பாளர்

### பிறந்த நாள் வாழ்த்து

உலக மொழிகளில் அதிகம்
மொழி மாற்றம் செய்யப்பட்ட
புத்தகத்தை கொண்ட
உலக மொழியாம் எங்கள் தாய்மொழி
தமிழ்மொழியில் உனக்கோர் பிறந்த நாள் வாழ்த்து

எங்கள் ஆண்டவரை ஆராதிக்க வாய்ப்பு தந்த
அஹமதி தமிழ் திருச்சபையே
உனக்கோர் பிறந்த நாள் வாழ்த்து
கடல் தாண்டி கண்டம் தாண்டி பிழைப்பை தேடி வந்த
எங்களுக்கு உறவுகளைத் தந்த
உனக்கோர் பிறந்தநாள் வாழ்த்து

கலங்கிய மனதோடு நிரம்பிய கண்ணீரோடு
உன் நிழலில் ஜெபித்த ஜெபங்களுக்கு
பதில் கிடைக்க செய்த
உனக்கோர் பிறந்தநாள் வாழ்த்து
காலங்கள் மாறியும் காட்சிகள் மாறியும்
மாறாமல் நீடித்து நிற்கும் உன் புகழுக்கோர்
பிறந்த நாள் வாழ்த்து
உண்மை தேவனை அறியாமல்
பெயர் கிறிஸ்தவனாய் அலைந்த
அநேகரை சிலுவை அன்பில் நடத்திய
உனக்கோர் பிறந்தநாள் வாழ்த்து

தகுதியில்லாதவரையும் பேதைகளையும்
ஊழியக்காரனாய் மாற்றி அழகு பார்த்த
உனக்கோர் பிறந்த நாள் வாழ்த்து
கடன்காரனாய் உன்னண்டையில் வந்த எங்களை
செல்வ கோமான்களாக்கி அழகு பார்த்த
உனக்கோர் பிறந்தநாள் வாழ்த்துக்கள்
இந்த அரேபிய தேசத்தில் அநாதையாய் வந்த
எங்களுக்கு தாய் சபையாகி உன் பிள்ளையாய்
உன்னிடத்தில் வந்து உயிருள்ள ஆண்டவரை
துதிக்க ஆராதிக்க ஆதரித்த
உனக்கு பிறந்தநாள் வாழ்த்து

நீ நீடூழி வாழ்ந்து எங்களைப் போல்
வருவோரை ஆதரித்து வழிநடத்துமாறு
இந்த 48-ஆம் ஆண்டு உன் பிறந்தநாள் தினத்திலே
உன்னை மனதார வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
கர்த்தரின் பணியில்
சுபின் சிங்
மற்றும் குடும்பத்தார்



## சகோதரிகள் ஐக்கிய குழு பொறுப்பாளர்

## தந்தைக்கு வாழ்த்துமடல்

என் தகப்பனிலும் மேலானவரே என் தாயினிலும் சிறந்தவரே
என் உயிரிலும் மேலான இயேசுவே
எங்கள் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிந்திருக்கிறவரே
நாங்கள் உம்மை தேடி வந்த போதெல்லாம்
எங்களை கைவிடாமல் காத்து வழி நடத்துபவரே
எங்கள் கண்ணீரை துடைத்து காலமெல்லாம் கண்மனிபோல் காத்து
ஒரு தகப்பனை போல தோளில் சுமந்து வந்தவரே
நாங்கள் எந்த நிலையிலிருந்தாலும் எங்களை அப்படியே ஏற்றுக்கொள்பவரே
இக்கட்டு காலத்தில் எங்களுக்கு அனுகூல துணையாளரே
எங்களுடைய பெலவீனத்தில் பெலன் தருபவரே
நாங்கள் உம்மை தெரிந்துகொள்வதற்கு முன்னேற
எங்களை நீர் தெரிந்து கொண்டு பெயர் சொல்லி அழைத்தவரே
எங்களை ஒரு குடும்பமாக நான்கு திசைகளிலிருந்து கூட்டி சேர்த்து
உம்மை துதிக்கவும் ஆராதிக்க செய்தவரே
இந்த வனாந்திரத்தில் எங்களை தேவைகளை சந்தித்து
ஒவ்வொரு நாளும் வழிநடத்தி வருபவரே
அனேக ஊழியங்களையும், ஊழியக்காரரின் ஊழியங்களையும்
எங்களுக்காக ஏற்படுத்தி உம்முடைய நாமத்தை
அனேகருக்கு சொல்லும்படியாகவும்அநேக சாட்சிகளையும் ஏற்படுத்தி
உம்முடைய நாமத்தை மகிமைபடுத்தும்படியாகவும் செய்து வருபவரே புதிதாய் பிறந்த பிள்ளைகளை
போல எங்களை மாற்றி உம்மில் களிகூறும்படியாக செய்தவரே
உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தி
எங்களுக்கு இரட்சிப்பு என்னும் தலைசீராவையும் தந்து மகிழ்பவரே
திருச்சபை எப்பொழுதெல்லாம் கூடி வந்து உம்மை ஆராதிக்கிறதோ
அப்பொழுதெல்லாம் நீர் எங்கள் மத்தியில் இரங்கி வந்து
எங்களை ஆசீர்வதிக்கிறவராய் இருக்கிறீர் நீர் எங்களுக்கு தாயுமாக,
தகப்பனுமாக சமாதானபிரபுவாக தேற்றரவாளனாக நித்தியபிதாவாக
ஆலோசனை கர்த்தராகவும் இருந்து இம்மட்டும் வழிநடத்தி வருகிறீர்
அகமதி திருச்சபையாகிய உம்மை பாடவும்,
புகழவும் உம்முடைய நன்மைகளை சொல்லவும் ஆயிரம் நாவுகள் இருந்தாலும் போதாது
48–வது ஆண்டு விழாவை காணும் எங்கள் அகமதி திருச்சபை
உம்மை வாழ்த்த எனக்கு வயதில்லையென்றாலும்
நீர் வாழ்க பல்லாண்டு வளர்க பலகோடி ஆண்டு என உம்மை வாழ்த்தி வணங்குகிறேன்.
நீ அநேக சபைகளுக்கு வெளிச்சம் தரக்கூடியகுன்றின் மேல்
வைக்கப்பட்ட விளக்கை போல அனேகம் பேருக்கு வெளிச்சம் தர வேண்டும், என்று உம்மை
வாழ்த்துகிறோம். இருந்தவரும், இருப்பவரும், இனிமேல் வருபவருமாகிய
எங்கள் இராஜாதி இராஜாவாகிய உம்முடைய வருகையில் மணவாளனாகிய நீர் மணவாட்டியாகிய
எங்களையும் உம்மோடு எடுத்துக்கொள்ளும்படியாக
எழுப்புதலின் தீ பற்றி எரியவும் அனேக ஆத்துமாக்களை அனுதினம் சபையில் சேர்க்கவும்
நாங்கள் ஆயத்தப்படவும் எங்களை ஒப்புக்கொடுக்கிறோம்.

மறுபடியுமாக 48–வது ஆண்டு விழாவை காணும் எங்கள் அகமதி திருச்சபையே
நீஇன்னும் பல ஆண்டு விழாக்களை காணும்படியாக உம்மை வாழ்த்தி வணங்குகிறேன்.

இப்படிக்கு,
கர்த்தரின் பணியில்
**சகோதரி. செலின் டேவிட்**
**மற்றும் குடும்பத்தார்**

## சோலை வனம்...

ஏதேன் தோட்டமாகிய
எம் அஹமதி திருச்சபையே,

48–வருடமாக குவைத் நாட்டில் மேலோங்கி
வளர்ந்துள்ள இப்பாலைவனத்தில்
சிறந்து விளங்கும் சோலை வனமே,
எம் சோர்வின் போதும், களைப்பின் போதும்,
நிழல் தரும் மரமாக கனி தரும் செடியாக
விளங்குவது உம் சிறப்பன்றோ.

எம் கண்ணீருக்கு கணக்கு வைக்கும் கர்த்தரை
மத்தியஸ்தராக கொண்டுள்ளது
உமது பெருமையே.

ஆலமரத்தில் தங்கும் பறவைகள் போலவும்
விழுதுகள் போல் ஏராளமான
ஆத்துமாக்களைக் கொண்டுள்ள உம்
சிறப்பைத்தான் என்னவென்று சொல்வது
விவரிப்பதற்கு வார்த்தைகளில்லை.
அநேக ஊழியர்களை உம் தோட்டத்தில்
செழிக்கச் செய்து அழகு பார்க்கும் உம்
அன்பை நான் என்னவென்று கூறுவது?

எம் இந்திய தேசத்திலிருந்து
அநேக ஊழியர்களை இங்கு கொண்டு வந்து
எங்கள் ஆத்தும தாகத்தையும் பசியையும்
போக்கும் செல்வச் சிறப்பே!

நீ நீடூழி பல்லாண்டு காலம் வாழ்க
என மனமார வாழ்த்துகின்றேன்.
இறைவனின் ஆசீர்வாதம் வளர்க.
உம் நாமம் ஒன்றே மேலோங்குவதாக
என்று மீண்டும் ஒருமுறை வாழ்த்தி
உம் பணி மன்மேலும் சிறக்க
எம் ஜெபத்தை ஏறெடுத்து உம் அன்பில்
களிகூர்ந்து எனது சபையோரை
ஆசீர்வதித்து மகிழ்கின்றேன்.

இப்படிக்கு,
A. பியூலா மெர்ஸிபால்
மற்றும் குடும்பத்தார்

## வெற்றி நிச்சயம்...

மறுமை என்ற வார்த்தை ஒன்றையே
மனதில் பொருந்தி!
கணக்கு இன்றி உழைப்பைப் புகுத்தி!
துவள வைக்கும் தோல்விகளை தகர்த்து !
மனம் முழுவதும் விசுவாச நம்பிக்கை சுமந்து
விழாது தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும்
சபையே!
எங்கள் அஹமதி தமிழ் திருச்சபையே

நீ நீடூழி வாழ்க பல்லாண்டு என
நானும் வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
சகோ.ஆண்டனி
மற்றும் குடும்பத்தார்

## பாலவன சோலை...

காலங்கள் பல கடந்தும்
காலத்தால் அழியாத
தேவ வார்த்தையை போல
48 வருடங்கள் கடந்தும்
எழில் தரும் சோலையாய் ஓங்கி நிற்கும்
எங்கள் அஹமதி தமிழ் திருச்சபையே
கடல் கடந்து சொந்தம் மறந்து
பந்தம் மறந்து தனியாய் நின்ற எங்களை
ஒரு தாயை போல தாங்கி நின்ற நிற்கும்
எங்கள் அஹமதி தமிழ் திருச்சபையே
எத்தனை வேதனைகள் வந்தாலும்
எத்தனை சோதனைகள் வந்தாலும்
உன் சந்நிதியில் வந்து நின்றால்
தாயின் மடி போல் தாங்குகின்ற
எங்கள் அஹமதி தமிழ் திருச்சபையே
பல ஆண்டுகளை நீ கடந்து
பாலைவன சோலையிலே ஒரு
பனித்துளி போல ஓங்கி வளர
மனமார வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு,
சகோ. ஆரோக்கியராஜ்
மற்றும் குடும்பத்தினர்.

Pastor. Nigel Solomon

## பாஸ்டர். நைஜல் சாலமோன்
## Sunday Scholl வாழ்த்துச் செய்தி

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிசுத்த பவுல் ஆலயம் குவைத் அஹமதி தமிழ் திருச்சபையின் சிறுவர் வேதாகம பள்ளி பிள்ளைகளையும், ஆசிரியர்களையும் பொறுப்பாளர்களையும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்போடு வாழ்த்துகிறேன்.

22–ஆம் ஆண்டு விழாவை காணச்செய்த கர்த்தருக்கு நன்றிகளையும் துதிகளையும் செலுத்துகிறேன். திருச்சபைக்கும் நம் தேசத்திற்கும் நம் சமுதாயத்திற்கும் மாபெரும் தூண்களை உருவாக்குகின்ற இந்த மகா பெரிய தரிசனத்தில் கர்த்தர் கொடுத்த அழைப்பை ஏற்று தங்கள் பொறுப்பை நேர்த்தியாய் நிறைவேற்றி வருகிற ஆசிரியர்களையும், பொறுப்பாளர்களையும், சபை விசுவாசிகளையும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வாழ்த்துகிறேன்.

**இந்த மகாகனம் பொருந்திய ஊழியத்தை தொடர்ந்து செய்ய கர்த்தர் உங்களுக்கு துணை நின்று நடத்தி ஆசீர்வதிப்பாராக.**



இப்படிக்கு உங்கள்

Pastor. Nigel Solomon

EL-ROI MINISTRIES

Vellore-TamilNadu-India

## Our Church...

On this day of heavenly milestone,
we remember the times when
we were alone,

But God's love and grace brought us to-
gether,
And now, we are a church that
will last forever.
We thank the Lord for
His guiding hand,
For leading us to this blessed land.

With hearts full of joy, we lift our voice,
And in his name,
we will always rejoice.

We children, learn about God's word,
Through our Ahmadi Tamil Church
Children Ministry
Our hearts sing God is the Savior and
He is the best.

By
Ashlyn Keziah

## JESUS in different languages

1. Albanian - Jezu
2. Arabic – Isa
3. English – Jesus
4. Hungarian - Ezus
5. Italian – Gesu
6. Malayalam – Yeshu
7. Tamil – Yesu
8. Ukrainian – Isus

By
D. Vimal Raj

## A Place...

A Place Where We Get Peace
A Place Where We Get Courage
A Place Where We Get Strength
A Place Where We Get Hope
A Place Where We Meet
Kind Hearted People

A Place Where We Get Advise
A Place Where We Get Repent
A Place Where We Get Confess
A Place Where We Get Warnings
A Place Where We Can
Check and Correct Our Ways

A Place Where We Worship
A Place Where We Praise
A Place Where We Receive
A Place Where We Give
A Place Where We All See God


A Place Has Captained Everyone's
A Place That Does Not
Need Advertisement
A Place That No One Forgets
A Place That Steps Into It's New Year
With Great Pride
Of It's Proud Past, Wolving Present And
Glorious Future
Ahmadi Tamil Chruch, A Place
We Always Chrish
A Place In Our Mind, Soul, and Sprit.

By
Stefana Sathish Kumar


# Names of Jesus Christ in alphabet 'A' & 'B'

Abiding Son (John 8: 35)
Abolisher of the Enemy (Eph 2: 15)
Abundant Grace (Rom 5: 17)
Abundant Life (John 10: 10)
Adonai (Deu 6: 4)
Advocate (1 John 2: 1)
Alpha and Omega (Rev 1: 8)
Anointed King ( 1Sam 2: 10)
Anointed One (Psalms 2 :2)
Almighty (Rev 1: 8)
Beginning and End (Rev 22: 13)
Blessed and Only Ruler (1 Tim 6: 15)
Bread of God (John 6: 33)
Bread of Life (John 6: 35)
Beloved Son (Mat 3: 17)

By
**D. Vincy Raani**





DAN JACOB





HANNAH QUEEN

AROLINA




AARON




ANDRON





AMISH




JERSLIN NIYA





DESSIE JANET





KALKI AADHERNA





MITHRAN




ADRIEL KEMUEL




RECHEL






## வாழ்த்துச் செய்தி

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள அன்பின் அஹமதி திருச்சபையோர்க்கு 48-வது ஆண்டு விழாவை கொண்டாடுகிற யாவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறோம்.

கடந்த வருடங்கள் சபையை கிருபையாக அதிசய ஆச்சரியமாக நடத்தி வந்த தேவனுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஸ்தோத்திரங்களை செலுத்துகிறோம். இந்த சபையில் தேவன் உருவாக்கிய விசுவாசிகளுக்காய் ஊழியர்களுக்காய் சபையை நடத்த பயன்படுத்திய ஊழியர்களுக்காய் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

சபையில் சத்துரு கொண்டு வந்த எல்லாக் கட்டுகளையும் மாற்றி இந்த ஆலயத்தில் வந்த ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தவர். இந்த புது வருடத்திலும் நீதி- 3:10ன்-ன் படி உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும். உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும். என்ற ஆண்டவரின் வார்த்தையின்படி வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். கர்த்தருக்குள்

பிரியமானவர்களே, நமது சபை ஆத்துமாக்களால் பூரணமாய் நிறைந்து ஆசீர்வாதங்களால் சபையின் குடும்பங்கள் எல்லாம் நிரம்பி புரண்டோட நாம் செய்ய வேண்டியது 1. இந்த வருடம் முழுவதும் நீதி-3:5-ன்படி கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து 2.நீதி-3:7-ன் படி கர்த்தருக்கு பயந்து தீமையை விலகி 3.நீதி-9-ன்படி கர்த்தரை கனம் பண்ணினால் நிச்சயமாகவே ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார் என்று வாழ்த்துகிறோம்.



கர்த்தரின் பணியில்
**R. ரவிச்சந்திரன் கிரேஸ்**
மற்றும் காருண்யா குடும்பத்தினர்

## வாழ்த்துச் செய்தி

கிறிஸ்துவுக்குள் அன்பான அகமதி தமிழ் சபை குடும்ப அங்கத்தினர் யாவருக்கும் இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள்.

48-ஆம் ஆண்டு விழாவை கொண்டாடும் அகமதி தமிழ்சபை அங்கத்தின் யாவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள். இந்த நல்ல நாளிலே அகமதி தமிழ் சபையை ஆரம்பித்த சபையின் வளர்ச்சிக்காக பாடுபட்ட உழைத்த சகோதர சகோதரிகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

அகமதி தமிழ் சபையின் மூலம் ஆசீர்வாதம் பெற்ற அன்பர்கள் உலகின் பல பாகங்களிலும் உள்ளனர். அவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். " உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்" (உபா-28:1-2) என்ற கர்த்தருடைய கற்பனை சத்தத்திற்கு கீழ்படிந்து தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.

48-ஆம் சபை ஆண்டு விழா கொண்டாடும் அகமதி தமிழ்சபை அங்கத்தினர் யாவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நல்வாழ்த்துக்கள்.



கர்த்தரின் பணியில்
**சகோ.ப.அருள்சாமுவேல்**
வல்லமையுள்ள தேவன் ஊழியங்கள்
திருவண்ணாமலை.

## ஏதேனாகிய அஹமதி

அது ஒரு அழகிய தோட்டம்
அது கர்த்தர் உருவாக்கிய தோட்டம்
அதன் பெயர் அஹமதி
அல்பாவும் ஒமேகாவும் ஆதியும்
அந்தமானவரே அதன் வெளிச்சம்
ஏதேனியாகிய அஹமதியின் நடுவில்
ஜீவ விருட்சம் போன்று செயற்குழு
அங்கத்தினர்

பெரிய ஆறுதலாக பத்து வகை ஊழியங்கள்
மலரும் மொட்டுகளாக மழலைகள்
குட்டிகுட்டி மலர்களாக சிறுவர்கள்
சகலவித விருட்சங்களாக சகோதரிகள்
கேதுரு மரங்களாக சகோதரர்கள்
கனி தருபவர்களாக முதியவர்கள்
ஏதேன் தோட்டமாகிய அஹமதியை
பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஊழியர்கள்
அஹமதிக்கு பாதுகாப்பு வேலியாக
சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்

48–வது வருடத்தை காணும்
எங்கள் அஹமதி திருச்சபையே
நீ வாழ்க பல்லாண்டு
வாழிய வாழியவே.

இப்படிக்கு,
**சகோதரி.ஜீனா சத்தீஷ்**
**மற்றும் குடும்பத்தார்**

## பச்சையான ஒலிவமரம்

கற்பாறையில் விழுந்த விதை
மரமாக வழியுண்டோ
முட்செடியில் விழுந்த விதை
முளைத்து வர வழியுண்டோ
பட்டமரம் என்றெல்லாம்
பார்த்தவர்கள் பரிகசிக்க
முன்னேற வழியில்லை
முடிந்தது என்றென்னும் போது
அழைத்தவர் நான் இருக்க
அந்தகாரம் உன்னை சூழ்ந்திடுமோ
ஆழ்மனதின் பாரமெல்லாம்
அழுகையின் வெளிப்பாடாய்
ஆலயத்தின் வாசலிலே
கண்ணீராய் ஓடிட கண்டேனே.. நீ
கற்பாறை விதையுமல்ல
முட்செடியில் விழவுமில்லை
நீ என்னால் விதைக்கப்பட்ட
பச்சையான ஒலிவமரம்..
என் ஆலயத்தில் நடப்பட்ட
கனி கொடுக்கும் திராட்சை செடி
கலங்காதே மணவாட்டியே (திருச்சபையே)
என் கரம் உன்னோடு
எப்போதும் துணை நிற்பேன்
என்றென்றும் காத்திடுவேன்

Happy 48-th Anniversery

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
**K.வனிதா**

### சபையின் மூலம் கட்டப்பட்டு வருகிற – ஒடிசா மாநிலத்தில் ஆலயத்தின் ஆரம்ப அடித்தள புகைப்படங்கள்







## என் நேசர் இயேசுவுக்காக

அமைதியாக இருந்தால் பிரச்சனை வராது
பொறுமையாக இருந்தால் நஷ்டம் வராது
மகிழ்ச்சியோடு இருந்தால் நோய் வராது
இயேசுவோடு இருந்தால் பாவம் தொடராது

என்னை வெறுப்பதற்கும் ஒதுக்குவதற்கும்
உலகில் பலர் உண்டு
என்னை கேலி செய்யவும் குறை சொல்லவும்
கூட பலர் உண்டு

ஆனால் என்னை நேசிப்பதற்கும் அன்பு
காண்பிப்பதற்கும் என் பாவத்துக்காக
மரித்த இயேசு மட்டுமே உண்டு

பணம் உள்ளவர்கள் எல்லாரும்
பெரியவர்கள் அல்ல
அதற்கு மனம் இருக்க வேண்டும்!
ஞானம் உள்ளவர்கள் எல்லாரும்
புத்திசாலிகள் அல்ல
அதற்கு தன்னடக்கம் இருக்க வேண்டும்!

பக்தி உள்ளவர்கள் எல்லாரும்
நீதிமான்கள் அல்ல
அதற்கு இயேசுவின் கிருபை வேண்டும்!

எம் அஹமதி தமிழ் திருச்சபையில்
உம்முடைய அளவில்லா கிருபை எங்களை
ஒவ்வொரு
நாளும் வழி நடத்தி எங்கள் கண்ணீர்
எல்லாம் துடைத்து
பல ஆசீர்வாதங்களை பெற்ற நாங்கள்
என்றும் நன்றி சொல்லுவோம்
நீர் என்றும் வாழ்க

48–வது ஆண்டு விழா வாழ்த்துக்கள்
அஹமதி தமிழ் திருச்சபையே...

இப்படிக்கு
எப்சிபா ஸ்டீபன்
மற்றும் குடும்பத்தினர்

## திருச்சபையே உன்னை வாழ்த்துகிறேன்

அன்பு திருச்சபையே
ஆணவ பெருந்தகையே

இன்னிசை இளவலே
ஈகையின் தாயுமானவனே

உன்னதமானவனே
ஊக்கத்தின் திருமருந்தே

எங்களை வாழ வைத்த
ஏற்றமுறு என் உயிரே

ஐயம் உற்ற வேளையில்

ஒளி விளக்காய் வெளிச்சம் தந்து
ஓடிவந்து அறவனைக்கும்

திருச்சபை உறவுகளுக்கு

என் குடும்பத்தின் சார்பாக
வாழ்த்துக்கள்!!!!

## நீரே என் சொந்தம்

என் இதயத்தில் நீங்கா இடம் பிடித்த என் அன்பு அஹமதி தமிழ் திருச்சபையே உன் பிறந்த நாட்களை நினைவு கூறும் போதெல்லாம் உன்னை உருவாக்கிய எங்கள் முற்பிதாக்களை நினைக்கிறேன். ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு நல்ல சபையை எங்களுக்கு தந்த அவர்களுக்கு நன்றி சொல்கிறேன், அவர்களை என் ஜெபத்தில் நினைக்கிறேன்.

என் உள்ளம் கொழுந்து விட்டு எரிகின்ற நல்லவைகளை நினைவு படுத்துகிறேன். நீர் நல்லவைகளைத் தந்து நல்லொழுக்கம் பேணி நல் உறவு மதித்து நல்ல உறவுகளைத் தந்து சுவிசேஷ நற்செய்தி பறைசாற்றி இல்லாருக்கு உதவி செய்து நல்லோர் பலர் உன்னைப் போற்றி துதிக்க எங்கள் இல்லத்தில் இன்பமும் உள்ளத்தில் மகிழ்வும், செழிப்பும் என்றும் தந்து எங்கள் குறைவை நிறைவாக்கிய நீர்

48 ஆண்டுகள் செய்த சாதனையைப் போல் இன்னும் பல ஆண்டுகள் சிறப்புடன் வாழ்ந்து வாழ்வின் துக்கத்தை

சந்தோஷமாக மாற்ற நீர் என்றும் பல்லாண்டு வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தும்.

# தேவ ஆலயமே

விண்ணின் மைந்தன் விண்ணகம் துறந்து மண்ணின் மனிதனுக்காய் விதைத்த வித்து நீ
விளைந்து செழித்து விருட்சமாகி வந்து விண்ணலாவி நிற்பதை கண்டு பாடுகிறோம் சிந்து
தேவ தயவால் பல தேவ மனிதர்களால் தேற்றரவாளன் துணை கொண்டு
நம் தேவைகள் நிறைபட தமக்கென்று நமக்காக நம்மால் உருவான
தன்னம்பிக்கையின் சிகரமே நமது சபை
இத்தரணியின் செம்மொழி தமிழகத்தின் வாய்மொழி
எத்திசையும் மொழி மணக்க தமிழரின் குணம் பெருக்க
பரம இயேசுவின் தூய பாதம் பணிந்திட எதிலும் பாகுபாடில்லா
அன்பின் உருவமே நமது சபை.
நதியின் பயணம் மலை முதல் முகில் வரை
நதியின் பயணம் கரு முதல் கல்லறை வரை
இறைநாயகன் பயணம் விண்முதல் மண் வரை என்றாலும்
நமது திருச்சபையின் பயணம் மறு இறை வரும்வரை
மிளிரும் விண்கற்கள் அதின் சுடர் சுகம்
ஒளிரும் விண்கதிர்கள் அங்கே வரம் தரும்
அடர் மிகும் வருணன் பொழியும் குளிர் மழை
இங்கு அருள் மிகும் இறைவன் வணங்கும் இறைமலை
சிறுவர் ஊழியம், முளைக்கும் வித்தின் ஓவியம், வாலிபர் ஊழியம், சிகர சிந்தை காவியம்,
பெண்கள் ஊழியம், தேனீயின் போதனை, எதிலும் சிறந்த ஒற்றுமை காண்பதே உனது
சாதனை. அன்பே உயரமாய் கொண்டு ஆலயம் பணிந்திட
உம் கரங்கள் அனாதை உறவாய் ஆதரித்த
பெண் கரங்கள் கோடி மனிதர்களின் துயர் துடைத்த தூயவன்
உம் கரங்கள் தெருக்கோடியில் நின்றவனையும்
கோபுரத்தில் உயர்த்திய செங்கரங்கள்.
எட்டாத சிகரம் தொடும் உந்தன் எண்ணாறு அகவை கண்ட
நீ எங்கு விழுந்தாலும் ஓங்கி எழும் திறன் கொண்ட
எமது தமிழ்த் திருச்சபையே நீ வாழிய வாழியவே.

எங்கோ பிறந்தோம் எங்கோ வளர்ந்தோம் இங்கு வந்தோம். எங்குமில்லா அன்பினைக் கண்டோம். வந்த நிலை மறவாது நிற்கும் நிலை மாறாது எல்லா வல்லவன் இயேசுவை காலமெல்லாம் நன்றியுடன் துதித்து என்றென்றும் உன்னுடன் இணைந்தே பயணம் செய்ய ஏங்கிடுதே எம் இதயம்.

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
**நகோமி**
**மற்றும் குடும்பத்தார்**

கிறிஸ்துவுக்குள் அன்பான
தமிழ் திருச்சபையார் அனைவருக்கும்
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்த்துவின் நாமத்தில்
48 வது ஆண்டின் வாழ்த்துக்களை மீனா அப்துல்லா
கேம்ப சகோதரர்கள் சார்பில் கூறி கொள்வதில்
பெருமகிழச்சி அடைகிறோம்.

**மீனா அப்துல்லா**
**கேம்ப் சகோதரர்கள்**

# என் தமிழ் திருச்சபையே
# நீடூழி வாழிய வாழியவே

அன்பின் இதயக்கோட்டையாய் அகமதியின்
வீற்றிருக்கும் திருத்துவம் நிறைந்த என் தமிழ் திருச்சபையே

ஆலமரமாக ஒவ்வொரு ஆத்தமாவிலும் அகல்
விளக்கினை போல் தீபமாய் ஒளிரும் என் தமிழ் திருச்சபையே

இன்னல்கள் களைந்து இடர்களை நீக்கி
இரக்கத்தின் சிகரமாய் மன்னிக்கும் என் தமிழ் திருச்சபையே

ஈசாய் என்னும் அடிமரமாய் துளிர்த்து
இளங்கிளைப்போல வல்லமையாய் விளங்க செய்திட்ட என் தமிழ் திருச்சபையே

உன்னதப்பாட்டு பாடி உம்மிலே நேசமாய் மகிழந்திட
உள்ளத்தில் ஆனந்தம் தந்திட்ட என் தமிழ் திருச்சபையே

ஊழியர்களையும் ஊழியக்காரிகளையும் அக்னி ஜுவாலையாக
ஜெபித்திட மறுரூபடுத்தும் என் தமிழ் திருச்சபையே

எண்ணங்களை சிறையாக்கி எண்ணெய்யால் அபிஷேகம்
செய்து எழும்பி பிரகாசிக்க செய்யும் என் தமிழ் திருச்சபையே

ஏறிட்டு கானகத்தை பார்த்த ஆகாரின் கண்ணீரையும்
அநேகர்களின் ஜெபத்தையும் ஜெயமாக்கிட்ட என் தமிழ் திருச்சபையே

ஐயத்தோடு அல்ல ஐக்கியமாய் ஒரு குடும்பமாக ஆராதிக்க
அனுக்கிரகம் செய்த என் தமிழ் திருச்சபையே

ஒன்றும் குறைவுபடாமல் பத்துக்கு பத்தாக
ஊழியங்களை உயர்த்தி தந்த என் தமிழ் திருச்சபையே

ஓரிரு ஆண்டு அல்ல உம் வருகை மட்டும் உணர்ந்திட
பெருகிட ஆத்துமா ஆதாய பணி தொடர்ந்திடும் என் தமிழ் திருச்சபையே

ஔஷதமாக அலங்காரமாக..
ஃஆயுத எழுத்தை போல் அல்ல

அன்பின் இதய துடிப்பாய் உம் வருகை மட்டும்
துடித்திட ராஜாவின் நாமத்தில் நீடூழி வாழிய வாழியவே

இப்படிக்கு,
எபினேசர்
மற்றும் குடும்பத்தார்

Pastor. Nigel Solomon

# பாஸ்டர் நைஜல் சாலமோன் வாழ்த்துச் செய்தி

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிசுத்த பவுல் ஆலயம் குவைத் அஹமதி தமிழ் திருச்சபையின் போதகர்களையும் மூப்பர்களையும் கமிட்டி அங்கத்தினர்களையும் இயேசு கிறிஸ்துவின் அன்பின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன். 48-ம் ஆண்டு விழாவை காணசெய்த கர்த்தருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளையும் ஸ்தோத்திரங்களையும் துதிகளையும் செலுத்துகிறேன். இந்த சபையை கர்த்தர் ஆசீர்வதித்து அநேகருக்கு ஆசீர்வாதமாய் வைத்திருப்பதால் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆதி-12:2 நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். இந்த வசனத்தின் படி கர்த்தர் சபையை நடத்தி வந்திருக்கிறார். இனியும் அநேகருக்கு ஆசீர்வாதமாய் இந்த சபையை நடத்தி உயர்த்துவார். யாபேசின் எல்லைகளை விரிவாக்கின கர்த்தர் இந்த சபையின் எல்லைகளை பெரிதாக்கி அனேக ஆத்துமாக்கள் பரிசுத்த பவுல் ஆலயம் குவைத் அஹமதி தமிழ் திருச்சபைக்குள் வந்து அற்புதங்களையும் அதிசயங்களையும் ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் கிருபைகளையும் வரன்களையும் கனிகளையும் அபிஷேகத்தையும் பூரண சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெற்று நிறைவான வாழ்க்கையை வாழ உங்கள் ஒவ்வொருவரையும் மனதார வாழ்த்தி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஊக்கமாய் ஜெபிக்கிறேன்.

பரிசுத்த பவுல் ஆலயம் குவைத்அஹமதி தமிழ் திருச்சபையை நடத்துகின்ற போதகர்களையும் மூப்பர்களையும் கமிட்டி அங்கத்தினர்களையும் சபை வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கிற உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்தி தரிசனத்திலும் அழைப்பிலும் உங்களை அர்ப்பணித்துக் கொண்டு நீங்கள் செய்து வருகிற எல்லா நன்மையான காரியங்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். இதற்குண்டான அறுவடைகளை நிச்சயமாய் நீங்கள் கர்த்தருடைய நாமத்தினாலே காண்பீர்கள் கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.



இப்படிக்கு உங்கள்
Pastor. Nigel Solomon
EL-ROI MINISTRIES
Vellore-TamilNadu-India

# கடந்த வருட நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில




பரி பவுல் ஆலயம்~ குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
48வது ஆண்டு விழா ~2024